செ.வெ. எண்: 327 4/6/2011

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்கள் சக்தியின் மூலம் மகத்தான வெற்றி பெற்று மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ளதையொட்டி, அவரை திரை உலகத்தினர் இன்று (4.6.2011) சந்தித்து அவரது தலைமையில் தமிழகம் அனைத்துத் துறைகளிலும் பீடுநடை போட தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை முன்னணி திரைப்பட நடிகர் திரு. கமலஹாசன், திரைப்பட நடிகை கௌதமி, மகள்கள் செல்வி அக்ஷரா ஹாசன், செல்வி சுப்புலட்சுமி, திரைப்பட நடிகர் திரு. பிரபு மற்றும் திருமதி பிரபு, திரு. ராம்குமார் மற்றும் திருமதி ராம்குமார், திரு. விக்ரம் பிரபு மற்றும் அவரது மனைவி, திரு. பிரபு அவர்களின் சித்தப்பா மகன் திரு. கிரி சண்முகம் மற்றும் திருமதி கிரி சண்முகம், திரு. பிரபு அவர்களின் சம்பந்தி திரு. மதிவாணன் மற்றும் திருமதி மதிவாணன், திரு. ராம்குமார் அவர்களின் மகன் திரு. துஷ்யந்த், திரைப்பட நடிகர் திரு. விஜய் மற்றும் அவரது தந்தையும் திரைப்பட இயக்குநருமான திரு. எஸ்.ஏ.சந்திரசேகரன் அவர்களும், பழம்பெரும் திரைப்பட குணச்சித்திர நடிகர் திரு. வி.எஸ்.இராகவன், பழம்பெரும் திரைப்பட நடிகைகள் திருமதி சி.சுகுமாரி, குமாரி சச்சு என்கிற P.S.சரஸ்வதி, , திருமதி எஸ்.என்.இலட்சுமி, திருமதி இராஜஸ்ரீ, திருமதி காஞ்சனா, பின்னணி பாடகி எல்.ஆர். ஈஸ்வரி, திரைப்பட தயாரிப்பாளர் திருமதி ஜெயந்தி ஏ.எல்.எஸ்.கண்ணப்பன், திரைப்பட ஒளிப்பதிவாளர் பாபு மற்றும் ‘‘மக்கள் குரல்‘‘பத்திரிகையின் மூத்த துணை ஆசிரியர் திரு. இராம்ஜி ஆகியோர் சந்தித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக மூன்றாவது முறையாக பதவியேற்று நல்ல பல திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருவதற்கு தங்களின் மகிழ்ச்சி கலந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அவர்களின் வாழ்த்துகளை இன்முகத்தோடு பெற்றுக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திரைப்படத் துறையினர் தன்னை நேரில் வந்து சந்தித்து தன்னை பாராட்டியமைக்கு தனது நன்றியை மகிழ்ச்சிப் பொங்க தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி - மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள்: 4.6.2011